**<u>திருத்தப்பட்டது:</u>**
**வரிசை எண்.3ல் நாள்.15.4.2008**

செய்தி வெளியீடு எண்.564 நாள்.14.7.2008

## <u>செய்தி வெளியீடு</u>

**தொலைபேசி ஒட்டுக்கேட்பு விவகாரம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் ஒய்வுபெற்ற நீதிபதி விசாரணை நடத்துவார் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் <u>15.4.2008</u> அன்று, அறிவித்திருந்தார். அதன்படி, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு. பி. சண்முகம் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு, அவர் தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரம் குறித்து விரிவாக விசாரணை செய்து 3 மாதங்களில் அரசுக்கு விசாரணை அறிக்கையை அளிப்பார் என 16.4.2008 அன்று அறிவிக்கப்பட்டது.**

**அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட நீதியரசர் பி. சண்முகம் 19.5.2008 அன்று இடைக்கால விசாரணை அறிக்கை ஒன்றினை அரசுக்கு அளித்தார். அதன் தொடர்ச்சியாக இன்று (14.7.2008) தமது விசாரணையின் முழுஅறிக்கையினை, முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நீதியரசர் பி. சண்முகம் வழங்கினார்.**

**அவ்வமயம், உள்துறைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, இ.ஆ.ப., பொதுத் துறைச் செயலாளர் திரு. டி. ஜோதிஜெகராஜன், இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.**

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.